RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s2118

# குன்னம் வட்டார நம்பிக்கைகளும், பழக்கவழக்கங்களும்

சி. தேவி [அ, *]

[அ] தமிழ்த்துறை, உறுமு தனலெட்சுமி கல்லூரி, கட்டூர், திருச்சிராப்பள்ளி-620019, தமிழ்நாடு, இந்தியா.

# Beliefs and Customs in Kunnam Region

C. Devi [a, *]

[a] Department of Tamil, Urumu Dhanalakshmi College, Kattur, Tiruchirapalli-620019, Tamil Nadu, India

* Corresponding Author: devidassad74@gmail.com

Received: 24-08-2022
Revised: 05-10-2022
Accepted: 11-10-2022
Published: 15-11-2022

Check for updates

**ABSTRACT**

Tamil poets have created, named, categorized, summarized and preserved dialects based on dialects in order to preserve the language they speak. Before exploring the importance of numbers in language it is necessary to know the design of grammatical literature. It is possible that the Sanskrit poets called the text grammar of the words when they recorded the language, they created in the journals so that it would be known to the world, and the textual literature of the world empirical biographies based on his quote characters. The words created for measurements such as size and mass are the primary letters of the words and the reasons for giving a special place to measurements in Tamil are explained. In order to give Tamil a lofty place in the world languages in are the numbers to indicate the of an action, the time of action, and the number of soldiers involved in the war.

**Keywords:** Tamil People, Kunnam Region, Beliefs, Education

## முன்னுரை

இயற்கையில் ஏற்படும் மாற்றங்களுக்குச் சரியான அறிவியல் பூர்வமான காரணகாரியங்களை அறியாத மனிதர்கள் தனக்குத் தெரிந்த காரணங்களைக் கொண்டு செயல்பட்டான். இதையே நம்பிக்கை என்று கூறுகிறோம். குன்னம் மக்களிடையே நம்பிக்கை உள்ளது. மனிதன் இடி, மழை, மின்னல் ஆகியவை எவ்வாறு நிகழ்கின்றன என்பதை அறியாத மனிதன் அதன் பின் ஏதோ ஒரு மிகபெரிய சக்தி என்பது ஒன்று உண்டு என்று நம்பினான். மனிதர்களின் மனதில் ஏற்படும் நம்பிக்கைகள் பலவாறாக உள்ளன. அவை அவரவர் பிறக்கும், வளரும், சூழல்களுக்கு ஏற்ப தோன்றுகின்றன. ஒருவர் கொண்டுள்ள நம்பிக்கை இன்னொருவருக்கு மூட நம்பிக்கையாகக் கருதப்படுகிறது. பட்டறிவாலும், கற்றுதெளிவதாலும் நம்பிக்கைகளைப் பகுத்து அறியும் மனிதர்கள் என அழைக்கப்படுகின்றனர். இருப்பினும் பகுத்தறிவாளர்கள் கொண்டுள்ள பகுத்து அறிவதே சரியென நம்பும் கொள்கையும் ஒரு நம்பிக்கையே ஆகும்.

## பழக்கவழக்கங்கள்

மனிதனின் பழக்கவழக்கங்கள் அவன் பிறந்த மண், சாதி, சமயம், ஆகியவற்றிற்கேற்ப மாறுபடுகின்றன. இப்பழக்க வழங்கங்கள் மனித வாழ்வில் பிறப்பு முதல் இறப்புவரை பின்னிப்

பிணைந்துள்ளனர். இவை வாழ்வு தொடர்பானவை. சாவுதொடர்பானவை. பிற பழக்கவழக்கங்கள் என மூன்று வகையாக பிரிக்கப்பட்டுள்ளன.

"குழல் இனிதுயாழ் இனிது என்பர் தம்மக்கள்

மழலைச் சொல் கேளாதவர்"

என்று வள்ளுவர் கூறுகிறார் (Parimelalhagar, 2002). ஒரு பெண் திருமணத்திற்கு பிறகு தாய்மை பேற்றை விரும்புகிறாள் அதற்கான அரச மரத்தைச் சுற்றுவதும் பாம்புப்புற்றை வணங்குவதும், மரத்தில் தொட்டில் கட்டுவதும் என்று பெண்கள் மேற்கொள்ளும் பழக்கவழக்கமாக உள்ளது. குழந்தை பிறந்தபின் வாயில் சர்க்கரைநீர் ஊட்டும் பழக்கம் இன்றும் உள்ளது. இதனை செவ்வெண்ணை வைத்தல் என்றும் கூறுவர்.

## பூப்பு தொடர்பான பழக்கவழக்கங்கள்

பெண்கள் பருமடைதலைப் பூப்படைதல் சமைதல், புஷ்பவதியாதல், திரளுதல் ஆளாதல் வயதுக்கு வருதல் எனப் பல வகையாக அழைப்பர். பூப்படைந்த பெண்ணைத் தனியே இருக்க செய்வர் ஏழு (அல்லது) ஒன்பது நாள் நீராடியபின் தான் வீட்டிற்கு அழைப்பர்.

## திருமணம் தொடர்பான பழக்கவழக்கங்கள்

திருமணத்திற்கு முன் பொருத்தம் பார்த்தல். பெண் பார்த்தல், பரிசம் போடுதல், தாலி செய்தல், முகூர்த்தக்கால் நடுதல் போன்ற பழக்கவழக்கங்கள் இருந்தன. திருமண நாளன்றோ (அ) மறுநாளோ மணமக்களை மணமகள் வீட்டிற்கு அழைத்து செல்வர். இதனை மறு வீடு செல்தல் என்று கூறுவர். வீட்டில் மணமகளை வலதுகாலை முதலில் வைத்து அழைப்பதும் இனிப்பு முதல் அனைத்து அறுசுவை உணவுகளைக் கொடுத்து உபசரிக்கும் வழக்கமும் இருந்தது.

## சகுனம் பற்றிய நம்பிக்கைகள்

சகுனம் பற்றிய நம்பிக்கைகள் உலகமெங்கிலும் பரவலாகக்காணப்படுகின்றன. தமிழ் இலக்கியங்கள் இதனை நிமித்தம் என்று கூறுகின்றன. நிமித்தம் என்பதற்கு வாழ்வியல் நிகழ்விற்கு நன்மை தீமைகளை சில நிகழ்வுகளின் வாயிலாக உணர்த்துவது என்று கூறப்படுகிறது. நற்செயலையும், நிகழ்வினையும் தெரிவிக்கும் நிகழ்வினை நன்நிமித்தம் என்று தீய செயல்களை தெரிவிக்கும் நிகழ்வினைத் தீநிமித்தம் என்று கூறுவர். இதனையே நல்ல சகுணம் கெட்ட சகுணம் என்று கூறுவர். மனிதர்கள், மனிதர்களின் செயல்பாடுகள், பறவை, விலங்குகளின் செயல்பாடுகள் கொண்டு சகுனம் பார்ப்பர், பறவைகளில் காகம், கருடன், கூகை, ஆந்தை வௌவால் போன்றவையும் சகுனம் பற்றி நம்பிக்கைளில் பெரும்பங்கு வகிக்கின்றன. பல்லி எந்த திசையில் இருந்து ஒலி எழுப்புகிறது. மனித உடலில் எந்த பகுதியில் விழுகிறது என்ற அடிப்படையில் பல்லி சகுனம் குறித்த பலன்கள் தீர்மானிக்கப்படுகின்றன.

## நல்லசகுனம்

காலையில் சுமங்கலிப் பெண்கள் முகத்தில் விழிப்பது நல்லது. பயணம் போகும் போது அழுக்கு துணியோடுவரும் வண்ணாரைப் பார்ப்பது நல்லது. ஏதேனும் நல்லகாரியத்திற்குப் புறப்படும் பொழுதுகாகம் இடம் இருந்துவலம் செல்லுதல் நல்லது என நம்புகின்றனர்.

"மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை

அன்புடைமரபின் கிளையோபாரா"

காகம் கத்தினால் விருந்தினர் வருவர் என்று அக்கால முதல் இக்காலம் வரை தமிழரிடையே நிலவி வரும் நம்பிக்கையாகும் (Puliyur kesigan, 2008).

நெடுஞ்சுவர்ப் பல்லியும் பாங்கிற் றேற்றம்

பல்லிமேற்கு திசையில் இருந்து ஒலி எழுப்பினால் நல்லது (Puliyur kesigan, 2018).

## கெட்ட சகுனம்

சுபகாரியங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும் போது விளக்கு அணைந்தால் நல்ல சகுணமாக கருதுவதில்லை இந்த நம்பிக்கை இந்தியா முழுவதும் உள்ளது.

"நெடுநகர் வரைப்பின் விளக்கும் நில்லா"

வௌவால் வீட்டின் பறந்தால் தீமைவரும். பல்லி தரையில் விழுந்தால் மரணம் நிகழும் யாரேனும் ஒரு காரியத்திற்குப் புறப்படும் போது தலை விரிகோலமான பெண்ணைக் கண்டால் கெட்ட சகுனமாக கருதுகின்றனர் (Puliyur kesigan, 2010).

## கனவு பற்றிய நம்பிக்கை

கனவு என்பது மனிதனின் தூக்கத்தில் உலாவரும் உள்மன வெளிப்பாடாகும். கனவு காணாதமனிதனே இவ்வுலகில் இல்லை. கனவில்வரும் நிகழ்வின் அடிப்படையில் நல்ல கனவு, கெட்ட கனவு என்று கூறுகின்றனர். ஏர் உழுவது போல கனவு கண்டால் தீயது நடக்கும் கனவில் தாமே இறந்துவிட்டதாகக் கனவுகண்டால் ஆயுள் பெருகும் இறந்தோர் கனவில் வந்து அழைத்தால் மரணம் வரும். வீடு பற்றி எரிவது போல கனவு கண்டால் செல்வம் பெருகும். அதிகாலையில் காணும் கனவு பலிக்கும். நல்ல கனவுகண்டு விழித்தால் பின் தூங்க கூடாது. என்று மக்கள் கனவு பற்றி நம்பிக்கைகளைக் கொண்டு காணப்படுகின்றனர்.

## நாள் பற்றிய நம்பிக்கைகள்

நாளும் கோளும் நலிந்தோர்க்கில்லை என்பது பழமொழி, என்றாலும் நாட்டுப்புற மக்கள், எந்த தொழிலைத் தொடங்கினாலும் நல்ல நேரம், நாள், சூலம் பார்த்து தொடங்குவதில் பெரிய நம்பிக்கையைக் கொண்டுள்ளனர். புதன், வியாழன், வெள்ளி, ஞாயிறு ஆகிய கிழமைகளில் திருமண நாள் குறிப்பது நல்லது. பிறந்த நாள் மற்றும் பிறந்த கிழமைகளில் திருமணம் நடந்தால் துன்பம் நேரும் சனிக்கிழமை ஒரு வீட்டில் இறப்பு நேர்ந்தால் அது தொடரும். திருமணமான பெண்ணை வெள்ளிக்கிழமையன்று கணவன் வீட்டிற்கு அனுப்பக்கூடாது என்ற நம்பிக்கைகளை இன்று வரை மக்கள் நம்புகின்றனர்.

## முடிவுரை

குன்னத்தில் இயற்கையோடு இயைந்தவாழ்வு நடத்தினர் என்பதும் பறவை, விலங்குகளின் நடத்தைகளை கண்டு அதன் மூலம் நம்பிக்கைகளை கொண்டிருந்தனர். நம்பிக்கை என்பது மனிதனின் மூன்றாவது கை என்பர். மக்கள் அக்காலம் முதல் இக்காலம் வரை நம்பிக்கைகளையும், பழக்கவழக்கங்களையும் கடைபிடிக்கின்றான்.

## References

Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Puliyur kesigan, (2010) Purananuru, Paari niliyam, Chennai, India

Puliyur kesigan, (2018) Nattrinai, Paari niliyam, Chennai, India.

Puliyur Kesikan, (2008) Kurunthogai Thelivurai, Paari Nilayam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License